செ.வெ.எண்: 03 நாள்: 04.06.2019

தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடத்தப்படும் மத்திய, மாநில அரசுப்பணிகளுக்கான இலவச பயிற்சியில் போட்டித்தேர்வுகளுக்கு விண்ணப்பித்துள்ளவர்கள் சேர்ந்து பயன்பெறலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக பல்வேறு மத்திய, மாநில அரசுப்பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்காக இலவச பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பட்டு அதன்மூலம் பல வேலைநாடுநர்கள் அரசு பணிக்கு சென்றுள்ளார்கள்.

தற்போது ரயில்வே பணியிடங்களுக்காக நடத்தப்படவுள்ள தேர்வு, மத்திய அரசு பணிக்காலியிடங்களுக்காக நடத்தப்படவுள்ள தேர்வு, தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தால் அறிவிக்கப்பட்ட இரண்டாம் நிலை காவலர், தீயணைப்பு காவலர் மற்றும் உதவி காவல் ஆய்வாளர் பணிக்காலி இடங்களுக்கான தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் 10.06.2019 முதல் அனைத்து வேலை நாட்களிலும் தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் (புதிய முகவரி ஆசிரியர் காலனி 1வது தெரு, பாண்யடின ் பேங்க் பின்புறம்) நடைபெற உள்ளது மற்றும் கோவில்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாலை 5 மணிமுதல் 8 மணிவரையிலும் ஆகிய இரண்டு இடங்களிலும் நடைபெறவுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட போட்டித்தேர்வுகளுக்கு விண்ணப்பித்துள்ள வேலை நாடுநர்கள் ஆன்லைனில் விண்ணப்பித்தமைக்கான நகலுடன் தங்களது வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டை, ஆதார் எண், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், ஆகியவற்றுடன் 10.06.2019-க்குள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை தொடர்பு கொண்டு இலவச பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுமாறு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**